செ.வெ.எண்:09/2016

நாள்:06.09.2016

சிவகங்கை மாவட்டம், சமூக நலத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் சார்பாக பாரம்பரிய உணவுத் திருவிழாவை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள சமுதாயக்கூடத்தில் 06.09.2016 முதல் 08.09.2016 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறும் சமூக நலத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் சார்பாக பாரம்பரிய உணவுத் திருவிழாவில், முதல் நாளான (06.09.2016) இன்று மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு.மாரியப்பன்கென்னடி அவர்கள் முன்னிலையில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, இன்றைய நாகரிகம் எனக் கருதி தெருவோரக் கடைகளில் பாஸ்ட்புட் (பீசா, பர்கர், பானிபூரி, பேல்பூரி) என கிடைப்பதை சாப்பிட்டு உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்து மருத்துவரை நாடிச்செல்லும் சூழ்நிலை உள்ளது. இதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமென்றால், பாரம்பரிய உணவு வகைகளான கேழ்வரகு, கம்பு, வரகு, தினை, குதிரைவாலி உட்கொள்வதன் மூலம் நமது உடல் ஆரோக்கியமாகவும், நோய் நொடிகள் வராமலும் பாதுகாக்கப்படுகிறது. உதாரணமாக, கேழ்வரகு இதயத்தை வலுப்படுத்தும் இரும்புச்சத்து நிறைந்தது. புரதச் சத்து மிக்கது. கம்பு உடல் சூட்டை தணித்து நீரழிவு நோயை குறைத்து பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் சுரப்பதை பெருக்கும். வரகு புற்றுநோயை தடுக்கும். உடல் எடையைக் குறைக்கும். தினை நீரழிவு நோயைக் கட்டுப்படுத்தும். குதிரைவாலி கெட்ட கொழுப்பை குறைக்கும். உடல் சூட்டை சமநிலையில் வைக்கும். புத்துணர்வான வாழ்க்கைக்கு நமது பாரம்பரிய உணவு தானியங்களைச் சாப்பிட்டு ஆரோக்கியமான வாழ்க்கையை பெற்றிடுவோம் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு.சிவதேவ்குமார், சிவகங்கை கோட்டாட்சியர் திரு.அரவிந்தன், மாவட்ட சமூகநலத் துறை அலுவலர் (பொறுப்பு) திருமதி.மணிமேகலை, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.